திரு. கே. டி. கே. தங்கமணி : இந்த மேம்பாலம் கட்டப்படாமல் இருக்கும் காரணத்தால் ஒன் வே டிராபிக் என்று வைத்து அதனால் பெரிய சிரமங்கள் இருக்கும் காரணத்தால் மூன்று மாத காலத்திற்குள்ளாக மேம்பாலத்தைக் கட்டுவதற்குத் தீவிர நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: 25 ஆண்டுகளுக்குப் பிறகு மேம்பால வேலைகளுக்கு அனுமதி அளிக்கப்பட்டிருக்கிறது. மூன்று மாத காலத்திற்குள் வேலையைத் துவங்க முடியாது. வேலைகளைத் துரிதப்படுத்த அதிகாரிகளுக்கு அறிவிக்கப்பட்டிருக்கிறது.

Age-limit for Government appointments

* 338. Q.—THIRU B. VENKATASWAMY : Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether there is any proposal to enhance the age-limit for Government appointment from 25 years to 30 years in Tamil Nadu Government Service ; and

(b) if so, when it will be implemented ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : (அ) & (இ) இது குறித்துப் பெறப்பட்ட முறையீடு ஒன்று ஆய்வில் உள்ளது. இன்னும் இறுதி முடிவு எடுக்கப்படவில்லை.

DR. H. V. HANDE : Sir, the Hon. Chief Minister in his reply stated that investigations are going on with regard to this. May I know the terms of reference that he has allotted for this and on what basis the Hon. Chief Minister has asked them to investigate the whole matter? May I know all the details concerned about it ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, திருநெல்வேலி மாவட்டத்தில் வேலை தேடுவோர் கழகம் என்ற கழகத்தின் சார்பில் 19—4—1971-ல் ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டு அதிலே அரசுப் பணிகளிலே சேர்பவர்களுக்கு உயர்ந்தபட்ச வயது 25 என்று இருப்பதை 30 ஆக உயர்த்த வேண்டுமென்று கேட்டுக்கொண்டு முறையீடு செய்தார்கள். அதைப் பற்றி ஆராய்வதற்காக பப்ளிக் சர்விஸ் கமிஷனுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. அவர்களுடைய கருத்துக்காக அரசு காத்திருக்கிறது.

திரு. பி. எஸ். மணியன் : அரசு ஊழியர்களும் மற்றத் துறைகளில் இருக்கக்கூடிய ஊழியர்களும் ஓய்வு பெறும் வயது வேறு வேறு விதமாக 55, 58, 60 என்ற வகையில் இருக்கிறது. இவைகளை எல்லாம் மாற்றி ஒரே சீராக 55 என்று குறிப்பிட அரசு ஆராயுமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : அந்த லட்சியத்தை நோக்கித்தான் அரசு பல காரியங்களை இப்போது எடுத்துக்கொண்டு நிறைவேற்றி வருகிறது.

1971 ஜூலை 21]

திரு. எம். ஆர். கண்ணன் : இப்போது வேலையில்லாத் திண்டாட்டம் அதிகமாக இருக்கிறது. 25 வயதுக்குள் சர்க்கார் வேலை கிடைக்கவில்லை என்றால் பெருவாரியான இளைஞர்கள் தங்கள் வாழ்க்கையே பாழ்பட்டுப் போய்விட்டதாக எண்ணிக் கொள்ளு கிறார்கள். ஆகவே, இந்த வயது வரம்பை 40 வயது என்று ஆக்கி அந்த அளவுக்கு பென்ஷன் மற்ற வசதிகளை அவர்கள் சர்வீசுக்கு ஏற்ப கொடுத்து வேலையில்லாத் திண்டாட்டத்தின் தீவிரத் தன்மையைக் குறைக்க அரசுக்கு எண்ணம் உண்டா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: 25 வயது என்று வரம்பு இருக்கும்போது சென்ற ஆண்டு பப்ளிக் சர்வீஸ் கமிஷன் குரூப் 4 தேர்வு எழுதியவர்கள் சுமார் 26,000 பேர், அரசுக்குத் தேவையான பணியாளர்கள் 2,500 அல்லது 3,000 பேர்தான். 25 வயது என்ற வரம்பு இருக்கும்போதே 26,000 பேர் தேர்வு எழுதியிருக்கிறார்கள் என்பதையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

திரு. செ. சதாசிவம்: இப்போது ஆசிரியர்களின் வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்குவதற்காக பயிற்சித் திட்டத்தின்கீழ் வேலை கொடுக்கப்படுகிறது. வேலையில்லாமல் நீண்ட நாட்களாக காத்துக்கொண்டிருக்கும் அவர்களுக்கு வயது வரம்பு நிர்ணயிக்கப் பட்டிருக்கிறதா ? செகண்டரி பள்ளிகளுக்குத் தனியாகவும், பஞ்சாயத்து யூனியன் பள்ளிகளுக்குத் தனியாகவும் நிர்ணயிக்கப் பட்டிருக்கிறதா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: வயது வரம்பு தளர்த்தப் படுவதற்காகத்தான் சில சலுகைகள் அளிக்கப்படுகின்றன.

திரு. கே. டி. கே. தங்கமணி : சிலதடவை போட்டிப் பரிட்சை எழுதி அவர்கள் அதில் பாஸ் பண்ணி இருந்தால்கூட செலக்ஷன் ஆகாமல் போய் விடுகிறார்கள். அந்தக் காரணத்தால் 25 வயது என்பதற்குப் பதிலாக 30 வயது என்று ஆக்க வேண்டுமென்று நெல்லை மாவட்டத்திலிருந்து மட்டுமல்ல, மற்ற மாவட்டங்களில் இருந்தும் முறையீடுகள் வருகின்றன. இது சம்பந்தமாக அரசு சீக்கிரம் நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : எற்கெனவே குறிப்பிட்டது போல் பப்ளிக் செர்விஸ் கமிஷன் அறிக்கை வந்த பிறகு உடன் முடிவு எடுக்கப்படும்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : பிற்பட்ட வகுப்பினர், அரிசனங்கள் போன்றவர்களுக்கு இப்போது இருக்கின்ற வயதைக் கூட்டுவதற்கு அரசாங்கம் முயற்சி எடுக்குமா ? அதே போன்று எம்ப்ளாய்மென்ட் எக்ஸ்சேஞ்சில் பதிவு செய்திருக்கின்றவர்களுடைய வயதை உயர்த்த அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : ஷெட்யூல்டு கிளாஸஸ், ஷெட்யூல்டு டிரைப்ஸ், பாக்வார்டு கிளாசஸ் ஆகியவர்களுக்கு சேர்வீஸ் கமிஷனில் இப்போதே சலுகைகள் அளிக்கப்பட்டிருக் கிறது. வயது வரம்பு தளர்த்தப்பட்டிருக்கிறது. எம்ப்ளாய்மென்ட்

[1971 ஜூலை 21

எக்ஸ்சேஞ்சில் பதிவு செய்திருக்கின்றவர்களுக்கு வயது வரம்பு தளர்த்தப்படுமா என்று கேட்டார்கள். சர்வீஸ் கமிஷன் அறிக்கை வந்த பிறகு இதைப்பற்றியெல்லாம் முடிவு செய்யப்படும்.

திருமதி ஜோதி வெங்கடாசலம்: 25 வயது என்று இருப்பதை 30 ஆக உயர்த்துவது பற்றி பப்ளிக் சர்விஸ் கமிஷனின் ஆராய்ச்சியில் இருப்பதாக கனம் முதல் அமைச்சர் பதில் கூறினார்கள். 25 வயது என்று இருக்கும்போதே சிலருக்கு நாட் கணக்கில், வாரக் கணக்கில், மாதக் கணக்கில் வித்தியாசம் ஏற்படுவதன் காரணமாக டிஸ்குவாலிபிகேஷன் ஆகக் கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இப்படி குறுகிய தினங்களாக இருந்தால் அரசாங்கம் ரிலாக்சேஷன் கொடுப்பார்களா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: இப்போதேகூட அப்படி அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள். வித்தியாசம் நாள் கணக்கில், வாரக் கணக்கில் இருந்தால் சலுகை அளிக்கப்படுகிறது.

'Dine and Dance' features in hotels in City

* 339. *Q.*—Thiru S. SANGUMUTHU THEVAR : Will the Hon. the Chief Minister be pleased to state the number of vegetarian and non-vegetarian hotels in which 'Dine and Dance' features have been permitted in Madras City ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: சென்னை மாநகரில் ஆறு புலால் உணவு ஓட்டல்களில் உணவு-நடன நிகழ்ச்சிகள் நடைபெறுவதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளன. சைவ ஓட்டல் எதிலும் அத்தகைய நிகழ்ச்சி நடைபெறுவதற்கு அனுமதிக்கப்படவில்லை.

திரு. எம். தேவராசன்: சில நாட்களுக்கு முன்னால் இந்த புலால் உணவு நாட்டிய ஓட்டலில் இருந்து பாம்பு ஒன்று தப்பித்து ஓடி விட்டதாகவும், அடுத்த நாள் பிடிபட்டதாகவும் சொல்வது உண்மையா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: பாம்பு தப்பித்ததா அல்லது பாம்பு நாட்டியம் ஆடியவர்கள் தப்பித்தார்களா என்பது தெரியாது.

திரு. ஏ. சி. நரசிம்மன்: ஓட்டல்களில் இதுபோன்ற நாட்டியங்களுக்கு ஆபாசமில்லாது நடத்த அனுமதி அளிக்கப்பட்டதாகச் சொன்னார்கள். ஆனால் இப்பொழுது சென்னையில் உஷா அய்யர் என்ற அம்மையார் ஆங்கில பாடல்களைப் பாடும்போது பார்த்துக் கொண்டிருப்பவர்களில் சிலர் ஆண்களும் பெண்களுமாகச் சேர்ந்து ஆடுகின்றார்கள் என்பது அரசுக்குத் தெரியுமா? அந்த நடனத்திற்கு அனுமதி கொடுத்திருக்கிறார்களா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: உஷா அய்யர் கச்சேரியைப் பொறுத்தவரை நான்கூட இதுவரை வெறும் இசைக் கச்சேரி என்றுதான் கருதிக் கொண்டிருந்தேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதைப் பார்த்துவிட்டு இந்த மன்றத்திற்குத் தகவல் கொடுத்ததற்காக நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.